

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (10.05.2023) முகாம் அலுவலகத்தில், கிருஷ்ணவேணி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 337/600 மதிப்பெண்கள் பெற்ற, நாமக்கல் மாவட்டம், பள்ளிப் பாளையத்தை சேர்ந்த விசைத்தறி தொழிலாளி திருமதி ராஜேஸ்வரியின் பிள்ளை ஸ்ரேயா (திருநங்கை) சந்தித்து வாழ்த்து பெற்றார்.

### 12 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற விசைத்தறி தொழிலாளி மகள்

# மேற்படிப்புக்குத் தேவையான உதவிகள் செய்து தருகிறேன்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

சென்னை, மே 11-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (10.05.2023) முகாம் அலுவலகத்தில் நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையத்தைச் சேர்ந்த விசைத்தறி தொழிலாளி திருமதி. ராஜேஸ்வரியின் பிள்ளை ஸ்ரேயா (திருநங்கை) சந்தித்து வாழ்த்து பெற்றார்.

ஸ்ரேயா (திருநங்கை), நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையம் கிருஷ்ணவேணி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் படித்துள்ளார்.

இவர் இந்த ஆண்டு நடைபெற்ற 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 337/600 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். இவர் தனது மேற்படிப்புக்கு உரிய உதவிகள் செய்திடுமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மேற்படிப்புக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவேன் என உறுதியளித்தார்.



பெருநகர வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 273 ஆவது குழுமக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேயர் ஆர்.பிரியா, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ். முருகன், முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், தாயகம்கவி, குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா நிதித்துறை கூடுதல் செயலாளர் பிரசாந்த் மு.வடநெரே, உயர் அதிகாரிகள் ம.கோவிந்த ராவ், நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் பா. கணேசன், குழும உறுப்பினர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கொடுங்கையூர்

# கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பராமரிப்புப் பணிகள்!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை,மே.11-

கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் 12.05.2023 அன்று காலை 6 மணி முதல் 13.05.2023 அன்று காலை 6 மணி வரை மண்டலம்4க்குட்பட்ட எருக்கஞ்சேரி கழிவு நீரிறைக்கும் நிலையம் செயல்படாது.

எனவே, மண்டலம்4, 5, 6 மற்றும் 8க்குட்பட்ட இடங்களில் உள்ள இயந்திர நுழைவாயில்களில் கழிவுநீர் நிரம்பி வெளியேறும் நிலை எற்பட்டால் அவசரத் தேவைகளுக்காக கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் மூலம் கழிவுநீரை வெளியேற்ற கீழ்க்காணும் பகுதி அலுவலர்களையும் மற்றும் தலைமை அலுவலக கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையத்தையும் தொடர்பு கொள்ளவும்.

அதன் விவரம் வருமாறு:

பகுதிப் பொறியாளர் - 4 (தண்டையார்பேட்டை) - கைபேசி எண்.8144930904, துணை பகுதிப் பொறியாளர்-4 - கைபேசி எண்.8144930254, பகுதிப் பொறியாளர் - 5 (இராயபுரம்) - கைபேசி எண்.8144930905, துணை பகுதிப் பொறியாளர்-5 - கைபேசி எண்.8144930255, பகுதிப் பொறியாளர் - 6 (திரு.வி.க நகர்) - கைபேசி எண்.8144930906, துணை பகுதிப் பொறியாளர்-6 - கைபேசி எண்.8144930256, பகுதிப் பொறியாளர் - 8 (அண்ணா நகர் ) - கைபேசி எண்.8144930908, துணை பகுதிப் பொறியாளர்-8 - கைபேசி எண்.8144930258, தலைமை அலுவலகம், - (சிந்தாதிரிப்பேட்டை) - 044-4567 4567- (கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம்)

இவ்வாறு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் விடுத்துள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளது.

### அரசின் சாதனை மலர் வெளியீடு

# உதகையில் 315 பயனாளிகளுக்கு ரூ.1.24 கோடி மதிப்பில் நல உதவிகள்!

## அமைச்சர் கா.இராமச்சந்திரன் வழங்கினார்!

உதகை, மே 11-

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு அமைந்து இரண்டாண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு, நீலகிரி மாவட்டத்தில் 'ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி"என்ற தலைப்பில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்தி ரன் 315 பயனாளிகளுக்கு ரூ.1.24 கோடி மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

நீலகிரி மாவட்டம் உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் 'ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி" என்ற தலைப்பில் நேற்று (10.05.2023) நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் 315 பயனாளிகளுக்கு ரூ.1.24 கோடி மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் சா.ப.அம்ரித் முன்னிலை வகித்தார்.

இவ்விழாவில், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் முதலமைச்சராக பதவியேற்ற நாள் முதல் பொது மக்களின் நலன்கருதி பல்வேறு நலத்திட்ட உதவிகளை அறிவித்து மிக சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்று குறுகிய காலத்திலேயே இந்தியாவின் மிகச்சிறந்த முதலமைச்சராக அறிவிக்கப்பட்டார். இருந்த போதிலும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதல் மாநிலமாக கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்தில் மிக சிறப்பாக இரவு பகல் பாராமல் செயல்பட்டு வருகிறார். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அரசின் நலத்திட்ட உதவிகள் பொதுமக்களுக்கு உரிய நேரத்தில் சென்றடைய வேண்டும் என்பதற்காக சம்மந்தப்பட்ட துறை உயர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தியும், அதனை கண்காணிக்கவும் தெரிவித்துள்ளார்.

அதற்கு உதாரணமாக நமது மாவட்டத்தில், சாதாரண கட்டண அரசு நகர பேருந்துகளில் மகளிர்களுக்கு கட்டணமில்லா பயண திட்டத்தின் கீழ் இது வரை 48,63,075 மகளிர் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொண்டு பயனடைந்துள்ளனர். சமூக நலத்துறை சார்பில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித்திட்டம் தற்போது மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதி திட்டம் என மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இந்த புதிய திட்டத்தின் கீழ் 6 வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளியில் பயின்று உயர்கல்வி கற்கும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கும் புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம் போன்ற புதிய திட்டங்களை செயல் படுத்தி உள்ளார்கள்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு நோய்கள் வருமுன் அதனை தடுக்கும் பொருட்டு, ஏழை எளியோர் வாழும் இடத்திலோ சிறப்பு மருத்துவ சேவையை அளிக்கும் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ்; 24 முகாம்கள் நடத்தப்பட்டு, 16 வகையான நோய்கள் கண்டறியப்பட்டு சிகிச்சைகள் மேற்கொண்டதன்; மூலம் 17628 நபர்களும், மக்களை தேடி மருத்துவ திட்டத்தின் கீழ், 49825 நபர்கள் பயனடைந்துள்ளனர். இல்லம் தேடி கல்வி திட்டத்தின் கீழ் 3295 பெண் தன்னார்வலர்களை கொண்டு, 15099 மாணாக்கர்களுக்கு கல்வி வழங்கப்பட்டு வருகிறது. சாலை விபத்தில் ஏற்படும் உயிரிழப்பை குறைத்திடும் நோக்கத்தில் விபத்து ஏற்பட்ட முதல் 48 மணி நேரத்திற்குள் கட்டணமில்லா உயிர்காக்கும் அவசர சிகிச்சை வழங்கும் இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 மணி நேரம் திட்டத்தின்கீழ் நமது மாவட்டத்தில் 761 நபர்கள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் பள்ளி செல்லும் குழந்தைகளுக்காக காலை உணவு திட்டம் என்ற ஒரு அற்புதமான திட்டத்தினை துவக்கி வைத்தார்கள். இத்திட்டமானது நமது மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருவதால், பள்ளிக்கு வரும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மேலும், தமிழக அரசு நமது மாவட்டத்திற்கு பல்வேறு சிறப்பு திட்டங்களை அறிவித்து, நடந்து முடிந்த பட்ஜெட் கூட்டத்தொ டரில் அங்கக வேளாண்மையை ஊக்குவித்து விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஏறத்தாழ ரூ.50 கோடி ஐந்தாண்டுகளுக்கு என சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதேபோன்று பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் நியாயவிலைக் கடைகளில் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு 2 கிலோ ராகி வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதுபோன்று எண்ணற்ற திட்டங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

இவ்விழாவின் மூலம், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 212 பயனாளிகளுக்கு ரூ.25 இலட்சம் மதிப்பில் ஒய்வூதியம் பெறுவதற்கான ஆணைகளையும், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் (இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை 10 பயனாளிகளுக்கு ரூ.2.25 இலட்சம் பெறுவதற்கான ஆணையினையும், விபத்து நிவாரண உதவித்தொகை 3 பயனாளிகளுக்கு ரூ.1.50 இலட்சம் பெறுவதற்கான ஆணையினையும், ரூ.25000/- மதிப்பில் 5 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், மாவட்ட சமூக நலத்துறை சார்பில் 35 பயனாளிகளுக்கு ரூ.16.25 இலட்சம் மதிப்பில் திருமண உதவித்தொகையும், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 14 குழுக்களுக்கு ரூ.14 இலட்சம் மதிப்பில் கடனுதவிகளும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.1 இலட்சம் சுய தொழில் வங்கி கடன் மானியமும், 16 பயனாளிகளுக்கு ரூ.2 இலட்சம் மதிப்பில் திறன் பேசிகளும், மாவட்ட பிற்படுத்தப்பட் டோர் மற்றும் சிறுபான் மையினர் நலத்துறை சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.24000/ மதிப்பில் தையல் இயந்திரங்களும், தாட்கோ சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.22.21 இலட்சம் மதிப்பில் வங்கி கடனுதவிகளும், மாவட்ட முன்னோடி வங்கி சார்பில் 1 பயனாளிக்கு ரூ.10 இலட்சம் மதிப்பில் மகளிருக்கான சுய தொழில் கடனுதவியும், 1 பயனாளிக்கு ரூ.2 இலட்சம் மதிப்பில் கல்வி கடனுதவியும், 1 பயனாளிக்கு ரூ.1.90 இலட்சம் மதிப்பில் தொழிற் கடனுதவியும் (முத்ரா), முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ.25 இலட்சம் மதிப்பில் மருத்துவ காப்பீட்டு அட்டைகளும் என மொத்தம் 315 பயனாளிகளுக்கு ரூ.1.24 கோடி மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளது. இதனை பொதுமக்கள் பெற்று பயன்பெற வேண்டும்

இவ்வாறு அமைச்சர் கா.ராமசந்திரன் தெரிவித்தார்.

முன்னதாக, அவர் இரண்டாண்டு சாதனை மலரினை வெளியிட அதன் முதல் பிரதியினை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்றுக் கொண்டார்.

இவ்விழாவில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கீர்த்தி பிரியதர்சினி, மகளிர் திட்ட இயக்குநர் பாலகணேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி. தனப்ரியா, வருவாய் கோட்டாட்சியர்கள் துரைசாமி (உதகை), பூஷணகுமார் (குன்னூர்), உதகை நகர் மன்ற தலைவர் திருமதி. வாணீஸ்வரி, ஊராட்சி ஒன்றிய தலைவர்கள் மாயன்(எ) மாதன் (உதகை), திருமதி. சுனித்தா நேரு (குன்னூர்), திருமதி.கீர்த்தனா (கூடலூர்), தாட்கோ மேலாளர் ரவிச்சந்திரன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.மலர்விழி உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (10.5.2023) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில், வன்கொடுமைகள் வழக்குகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலாளர் க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் த.ஆனந்த், காவல்துறை தலைவர் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் எஸ்.பிரபாகரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் ஒன்றிய செயலாளர், சே. பிரேம் ஆனந்த் தலைமையில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும், மாவட்டச் செயலாளருமான ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ அரசின் சாதனைகளை விளக்கி பேசினார். இதில் ஆ. கிருஷ்ணசாமி எம்எல்ஏ, பேச்சாளர் தமிழன்பன், நிர்வாகிகள் நடுகுத்தகை ஜெ.ரமேஷ், பிரபு கஜேந்திரன். ம.இராஜி, சி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதர், பா.நரேஷ் குமார், ஜெயசீலி ஜெயபாலன், ப.ச.கமலேஷ், தி.வே.முனுசாமி, த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், டி.தென்னவன், க.ஜெயராமன், ஞா.ரமேஷ், மு.ராஜா, மகேஸ்வரிபாலவினாயகம், பக்தவச்சலு, ஆர்.திலீப்ராஜ், ப.இம்மானுவேல், கவுன்சிலர்கள் சங்கீதா ராஜ், வ.ஹரி, வேதவல்லிசதீஷ், தலைவர்கள் மேலகொண்டையூர் சீனிவாசன், டெசிராணி ஆல்பர்ட், இ.சீனிவாசன், கிளைச் செயலாளர் கு.கருணாகரன், உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில்

# மாநகர- ஒன்றிய - நகர - பேரூர் வாரியாக இளைஞரணி சார்பில் தெருமுனைக் கூட்டங்கள்!



## மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

| தேதி & நேரம் | தலைமை கழக பேச்சாளர்கள் | மாநகரம் / நகரம் / ஒன்றியம் / பேரூர் | இடம் |
|---|---|---|---|
| 20.05.2023 – 4 மணி | ஆரணி மாலா | உத்திரமேரூர் பேரூர் | பேரூர் |
| 20.05.2023 – 5 மணி | ஆரணி மாலா | உத்திரமேரூர் ஒன்றியம் | கருவேப்பம்பூண்டி |
| 20.05.2023 – 6 மணி | ஆரணி மாலா | உத்திரமேரூர் ஒன்றியம் | ஆதவப்பாக்கம் |
| 20.05.2023 – 7 மணி | ஆரணி மாலா | காஞ்சிபுரம் தெற்கு | வேடல் |
| 21.05.2023 – 4 மணி | ஆரணி மாலா | காஞ்சிபுரம் தெற்கு | திருவள்ளூர் குடியிருப்பு |
| 21.05.2023 – 5 மணி | ஆரணி மாலா | காஞ்சிபுரம் வடக்கு | விப்பேடு |
| 21.05.2023 – 6 மணி | ஆரணி மாலா | காஞ்சிபுரம் வடக்கு | கீழ்க்கதிர்பூர் |
| 21.05.2023 – 7 மணி | ஆரணி மாலா | வாலாஜாபாத் வடக்கு | வேடல் |
| 20.05.2023 – 4 மணி | தக்கோலம் தேவபாலன் | வாலாஜாபாத் வடக்கு | சேக்காங்குளம் |
| 20.05.2023 – 5 மணி | தக்கோலம் தேவபாலன் | வாலாஜாபாத் தெற்கு | தென்னேரி |
| 20.05.2023 – 6 மணி | தக்கோலம் தேவபாலன் | வாலாஜாபாத் தெற்கு | திம்மராஜாம்பேட்டை |
| 20.05.2023 – 7 மணி | தக்கோலம் தேவபாலன் | வாலாஜாபாத்பேரூர் | பேரூர் |
| 21.05.2023 – 4 மணி | தக்கோலம் தேவபாலன் | மதுராந்தகம் வடக்கு | மாமண்டூர் |
| 21.05.2023 – 5 மணி | தக்கோலம் தேவபாலன் | மதுராந்தகம் வடக்கு | புக்கதுறை |
| 21.05.2023 – 6 மணி | தக்கோலம் தேவபாலன் | மதுராந்தகம் தெற்கு | ககாட்டுதேவதூர் |
| 21.05.2023 – 7 மணி | தக்கோலம் தேவபாலன் | மதுராந்தகம் தெற்கு | முதுகரை |
| 20.05.2023 – 4 மணி | நாதிகம் நாகராஜன் | கருங்குழி பேரூர் | பேரூர் |
| 20.05.2023 – 5 மணி | நாதிகம் நாகராஜன் | மதுராந்தகம் நகரம் | நகரம் |
| 20.05.2023 – 6 மணி | நாதிகம் நாகராஜன் | அச்சரப்பாக்கம் வடக்கு | கூடலூர் |
| 20.05.2023 – 7 மணி | நாதிகம் நாகராஜன் | அச்சரப்பாக்கம் வடக்கு | திட்டலாம் |
| 20.05.2023 – 4 மணி | கலைச்செல்வி ஜகந்நாதன் | அச்சரப்பாக்கம் பேரூர் | பேரூர் |
| 20.05.2023 – 5 மணி | கலைச்செல்வி ஜகந்நாதன் | அச்சரப்பாக்கம் தெற்கு | தொழுபேடு |
| 20.05.2023 – 6 மணி | கலைச்செல்வி ஜகந்நாதன் | அச்சரப்பாக்கம் தெற்கு | ஆத்தூர் |
| 20.05.2023 – 7 மணி | கலைச்செல்வி ஜகந்நாதன் | சித்தாமூர் மேற்கு | புலியரணை |
| 22.05.2023 – 4 மணி | சேப்பாக்கம் பிரபபாகரன் | சித்தாமூர் மேற்கு | அரப்பேடு |
| 22.05.2023 – 5 மணி | சேப்பாக்கம் பிரபபாகரன் | சித்தாமூர் கிழக்கு | சித்தூர் |
| 22.05.2023 – 6 மணி | சேப்பாக்கம் பிரபபாகரன் | சித்தாமூர் கிழக்கு | கடுகலூர் |
| 22.05.2023 – 7 மணி | சேப்பாக்கம் பிரபபாகரன் | இடைக்கழி நாடு | பேரூர் |
| 21.05.2023 – 4 மணி | முரசொலி மூர்த்தி | இலத்தூர் வடக்கு | காதங்கடை |
| 21.05.2023 – 5 மணி | முரசொலி மூர்த்தி | இலத்தூர் வடக்கு | கல்குளம் |
| 21.05.2023 – 6 மணி | முரசொலி மூர்த்தி | இலத்தூர் தெற்கு | செங்காட்டூர் |
| 21.05.2023 – 7 மணி | முரசொலி மூர்த்தி | இலத்தூர் தெற்கு | வடபட்டினம் |
| 20.05.2023 – 4 மணி | மங்களம் பிரபாகரன் | சாலவாக்கம் ஒன்றியம் | சேந்தான்குளம் |
| 20.05.2023 – 5 மணி | மங்களம் பிரபாகரன் | சாலவாக்கம் ஒன்றியம் | ஒழையூர் |
| 20.05.2023 – 6 மணி | மங்களம் பிரபாகரன் | திருக்கழுக்குன்றம் தெற்கு | வழுவத்தூர் |
| 20.05.2023 – 7 மணி | மங்களம் பிரபாகரன் | தருக்கழுக்குன்றம் தெற்கு | வாயலூர் |
| 21.05.2023 – 4 மணி | குடியாத்தம் பெரிய கோட்டீஸ்வரன் | காஞ்சிபுரம் பகுதி –1 | ஒலிமுகம்மதுபேட்டை |
| 21.05.2023 – 5 மணி | குடியாத்தம் பெரிய கோட்டீஸ்வரன் | காஞ்சிபுரம் பகுதி –2 | ராஜாஜி மார்க்கெட் |
| 21.05.2023 – 6 மணி | குடியாத்தம் பெரிய கோட்டீஸ்வரன் | காஞ்சிபுரம் பகுதி –3 | ஓரிக்கை |
| 21.05.2023 – 7 மணி | குடியாத்தம் பெரிய கோட்டீஸ்வரன் | காஞ்சிபுரம் பகுதி –4 | பிள்ளையார் பாளையம் |

சம்பந்தப்பட்ட, மாநகர நகரம், ஒன்றிய, பேரூர் இளைஞரணி அமைப்பாளர்கள், அந்தந்த பகுதிக்கு உட்பட்ட ஒன்றிய செயலாளர்களுடன் இணைந்து அவர்களின் ஆலோசனைப்படி கூட்ட அழைப்பிதழை அச்சிட்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்துகொள்ளுமாறும், இக்கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடு செய்யுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

**க.சுந்தர், எம்.எல்.ஏ.**

செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.